# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 675/2014**

**Deposition of Witness for Prosecution : P.W.7**

| | | | |
|---|---|---|---|
| Name | : சுசிபிரதீப் | Caste | : |
| Father/Husband Name | : சீனிவாசன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Accusd Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 15.15.2026.**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் எலும்புமுறிவு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2014ம் ஆண்டு எழுமலை ஆரம்ப சுகாதார நிலையத்தில் உதவி அறுவை சிகிச்சை நிபுணராக பணியாற்றினேன். எதிரி செந்தில்குமார் அங்கே பணிபுரிந்தார். எனவே, கடந்த 23.09.2014ம் தேதி எங்கள் மருத்துவமனையில் பணிபுரிந்த ஊழியர்கள் அனைவரும் ரூ.1,175ஐ வசூல் செய்து அ.சா.1னிடம் கொடுத்தோம். அ.சா.1 மேற்படி தொகையை எதிரியிடம் கொடுத்து தொழில் வரி கட்டச்சொல்லியுள்ளார். ஆனால் எதிரி மேற்படி தொகையை கட்டவில்லை என்று சொன்னார்கள். அதனால் நாங்கள் மீண்டும் பணத்தை வசூல் செய்து தொழில் வரியை கட்டினோம். இது சம்பந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. புகார் கொடுத்து எத்தனை நாட்களுக்குள் போலீசார் விசாரணை செய்தார்கள் என்றால் ஒரு வாரகாலத்திற்குள் விசாரணை செய்தார்கள். தொழில் வரி நேரடியாக எங்களது சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்றால் சரியல்ல. நான் மேற்படி தொழில் வரி தொகையை எதிரியிடம் நேரடியாக கொடுக்கவில்லை

என்றால் சரிதான். அ.சா.1னிடம் கொடுத்தேன். அ.சா.1 மேற்படி வசூலிக்கப்பட்ட தொகையை எதிரியிடம் கொடுத்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் அ.சா.1 மேற்படி தொகையை எதிரியிடம் கொடுக்கவில்லை என்றாலும், எதிரி எந்த கையாடலும் செய்யவில்லை என்றாலும், எனது உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.05.15 17:10:57 +0530

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 675/2014**

**Deposition of Witness for Prosecution : P.W.6**

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரியா | Caste | : |
| Father/Husband Name | : இராஜாங்கம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Accusd Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 15.15.2026.**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தேனி அரசு மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2014ம் ஆண்டு எழுமலை ஆரம்ப சுகாதார நிலையத்தில் உதவி அறுவை சிகிச்சை நிபுணராக வேலை பார்த்தேன். அந்த சமயத்தில் எதிரி எங்கள் அலுவலகத்தில் வேலை பார்த்தார். 6 மாதத்திற்கு ஒருமுறை தொழில்வரி செலுத்த வேண்டும். எனவே, கடந்த 23.09.2014ம் தேதி எங்கள் மருத்துவமனையில் பணிபுரிந்த ஊழியர்கள் அனைவரும் ரூ.1,175ஐ வசூல் செய்து அ.சா.1னிடம் கொடுத்தோம். அ.சா.1 மேற்படி தொகையை எதிரியிடம் கொடுத்து தொழில வரி கட்டச்சொல்லியுள்ளார். ஆனால் எதிரி மேற்படி தொகையை கட்டவில்லை என்று சொன்னார்கள். அதனால் நாங்கள் மீண்டும் பணத்தை வசூல் செய்து தொழில் வரியை கட்டினோம். இது சம்பந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**1.** புகார் கொடுத்து எத்தனை நாட்களுக்குள் போலீசா விசாரணை செய்தார்கள் என்றால் ஒரு வாரகாலத்திற்குள் விசாரணை செய்தார்கள். தொழில் வரி நேரடியாக எங்களது சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்றால் சரியல்ல. நான் மேற்படி தொழில் வரி தொகையை எதிரியிடம் நேரடியாக கொடுக்கவில்லை

என்றால் சரிதான். அ.சா.1னிடம் கொடுத்தேன். அ.சா.1 மேற்படி வசூலிக்கப்பட்ட தொகையை எதிரியிடம் கொடுத்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் அ.சா.1 மேற்படி தொகையை எதிரியிடம் கொடுக்கவில்லை என்றாலும், எதிரி எந்த கையாடலும் செய்யவில்லை என்றாலும், எனது உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காயம்பட்ட நபர்கள் தன்னை 4 நபர்கள் தாக்கியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். தமிழ்செல்விக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் முதல் சிதைந்த காயத்தின் அளவுகளை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2 மற்றும் 3 கன்றிய காயங்களுக்கும் அளவுகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி 3 காயங்களும் கீழே விழுந்து கல் குத்தினால் ஏற்பட வாய்புள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட நபர் சொன்ன நேரத்திற்கு முன்போ, பின்போ ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். கம்பு மற்றும் கம்பியால் தாக்கியிருந்தால் அந்த ஆயுதம் எந்த அளவில் உடம்பில் படுகிறதோ அந்த அளவில் காயம் ஏற்படும் என்றால் சரிதான். 2வது நபரும், முதல் நபரைப்போல், முதல் நபரின் கணவர் மட்டுமே கம்பு மற்றும் கம்பியால் தாக்கியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 2வது நபருக்கு ஏற்பட்ட காயங்கள், கம்பு மற்றும் கம்பியால் தாக்கியிருந்தால் அந்த ஆயுதம் எந்த அளவில் உடம்பில் படுகிறதோ அந்த அளவில் காயம் ஏற்படும் என்றால் சரிதான். தாக்குகின்ற வேகத்தை பொறுத்து காயம் ஏற்படும். கண்ணிலுள்ள உள்ள காயம் கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட நபர் சொன்ன நேரத்திற்கு முன்போ, பின்போ ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். கம்பியால் தாக்கும்போது ஒருவிதமான காயமும், கம்பால் தாக்கும்போது வேறு விதமான காயமும், ஏற்படும் என்றால் ஆயுதத்தை பயன்படுத்தும் வேகத்தை பொறுத்து எந்த காயமானலும் ஏற்படும். கம்பி மற்றும் கம்பால் ஓங்கி அடிக்கும் போது ஒழுங்கற்ற சிதைந்த காயம்தான் வரும் என்றாலும், கன்றிய காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல, மேற்படி ஆயுதத்தின் வேகத்தை பொறுத்தும், அடிபடும் நபரின் உடல் அமைப்பை பொறுத்தும், காயத்தின் தன்மை மாறுபடும்.

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.05.15 17:12:52 +0530